26.02.2025. O.S.No. 88 of 2024 P.W. 1 (**தீனதயாலன்**)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை

15.05.2022-ம் பிரதிவாதி என்னை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினத்தில் பிரதிவாதி எப்போது பாண்டு கொடுத்து பணம் கொடுத்தார் என்றால் என் கடையில் வைத்து பணம் வாங்கினார். பிரதிவாதி பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் அண்ணன் கொடுத்த பாண்டை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 25.03.2020 அன்று பேங்க் ஆப் இந்தியாவில் இருந்து 30 லட்சம் பணம் எடுத்து பிரதிவாதியின் அண்ணன் பெருமாளுக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. 18 லட்சம் பணம் கொடுத்து பிரதிவாதியின் அண்ணனிடமிருந்து அவரது சொத்தை கிரையம் செய்தேன். 25.03.2020-க்கு முன்பு பிரதிவாதி எனக்கு பழக்கமில்லை. அதற்கு பின்பு பிரதிவாதியின் அண்ணன் எனக்கு சொத்தை கிரையம் கொடுத்தபோது பிரதிவாதி அதற்கு சாட்சி கையொப்பம் போட்டார், அப்போதிலிருந்துதான் தெரியும். பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.26 16:23:35 +0530